**துறைமுகங்கள் மற்றும் விமானசேவை அமைச்சு**

**திட்ட முகாமைத்துவ பிரிவு**

**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தித் திட்டம் நிலை II கட்டம் 2**

# வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படை)

BIA அபிவிருத்தித் திட்டமானது விமானசேவை துறையில் அதிகரித்துவரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வசதிகளை பரிமாற்றுவது மற்றும் விரிவுபடுத்துவதை இலக்காகக் கொண்டு முன்னெடுக்க முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) நிதியளிப்பதோடு அதிநவீன மற்றும் சமகால வசதிகளுடன் கூடிய, நவீன தொழில்நுட்பத்தினை கொண்ட புதிய முனையக் கட்டிடத்தின் நிர்மாணத்தை இது உள்ளடக்கியுள்ளது. இந்தத் திட்டம் முனையக் கட்டிடத்தை மட்டுமல்லாது, அதனுடன் தொடர்புடைய அனைத்து பணிகளையும் — இயந்திர (Mechanical), மின்சார (Electrical), குழாய் பொருத்தல் (Plumbing - MEP), தகவல் தொழில்நுட்ப அடித்தளங்கள் (IT Infrastructure), மற்றும் ஜப்பானிய பொறியியல் ஆலோசனையுடன் இணைந்த சிவில் பொறியியல் நிர்மாணங்களையும் — உள்ளடக்கியதாகும்.

***நிதி அமைச்சின் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி கட்டுநாயக்கவில் PMU உள்ள பின்வரும் பதவிகளை பூர்த்தி செய்வதற்கு, தகுதி பெற்ற சுறுசுறுப்பான இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன***

## 1. திட்டப் பணிப்பாளர் - பதவி 01

**முக்கிய பொறுப்புகள்:**

திட்ட பணிப்பாளர் முழு திட்டத்தையும் செயற்படுத்துவதற்கும், நிர்மாண மேற்பார்வை, சோதனை, தரக் கட்டுப்பாடு, திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளையும் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றின் போது ஒட்டுமொத்த திட்டமிடல், வடிவமைப்பு, ஒருங்கிணைப்பு, செயற்படுத்தல், ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பயனுள்ள திட்ட நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும் பொறுப்பானவராவார்.

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம் :**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணிப்பட்டம்.

**மற்றும்**

அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் ஒன்றில் அங்கத்துவம் மற்றும் இலங்கை பொறியியல் சபையின் செல்லுபடியான அங்கத்துவம்.

**அத்துடன்**

07 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்துடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 14 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

ஒப்பந்த நிர்வாகம் மற்றும் பெறுகை முகாமைத்துவத்தில் அனுபவத்துடன் பன்னாட்டு சூழலைக் கொண்ட (குறிப்பாக வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட) சிவில் பொறியியல் திட்டங்கள் மற்றும்/ அல்லது பல்நோக்கு பொறியியல் திட்டங்களை நிர்வகித்தலில் கணிசமான ஆண்டுகள் அனுபவத்தை பெற்ற அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பளம்: **PS 1** தரம் ரூபா 200,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

## 2. சிவில் பொறியியலாளர் - பதவி 02

தகைமைகள்: (கீழுள்ள *i* அல்லது *ii*)

i. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணி பட்டம்

**அல்லது**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்றாக தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை

**அல்லது**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து இணை அங்கத்துவம் அல்லது அதனையொத்த தொழில்முறை தகைமை

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் குறைந்தது 09 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்

**அல்லது**

ii. தொடர்புடைய துறையில் அகில இலங்கை சேவை வகுப்பு III/II அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது அதனையொத்த அந்தஸ்துடைய அரச அதிகாரி ஒருவர்

**அத்துடன்**

வகுப்பு III/II பதவியில் குறைந்தது 09 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**சம்பளம்:** **PS 4** தரம் - ரூபா 155,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

## 3. தலைமை கணிய அளவையாளர் - பதவி 01

**தகைமைகள்:**

i. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணிய அளவையியல் துறையில் இளமாணிப்பட்டம்

**அத்துடன்**

ii. கணிய அளவையியலில் புகழ்பெற்ற தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்.

**அத்துடன்**

கணிய அளவையியல் துறையில் குறைந்தது 09 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**சம்பளம் :** **PS 4** தரம் - ரூபா 155,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

## 4. திட்டச் செயலாளர் - பதவி 01

**தகைமைகள்: (கீழுள்ள *I* அல்லது *II*)**

i. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து செயலாளர் கற்கை ஒன்று அல்லது பட்டய செயலாளருக்கு வழிவகுக்கும் பரீட்சைகளைத் தொடர்தல்

**அத்துடன்**

செயலாளர் ஒருவராக குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம்

**அல்லது**

ii. செயலாளர் ஒருவராக குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவத்துடன் பட்டய செயலாளர் ஒருவர்

**சம்பளம்:** **PS 6** தரம் - ரூபா 67,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

## 5. அலுவலக உதவியாளர் - பதவி 02

**தகைமைகள்: (கீழுள்ள *I* அல்லது *II*)**

i. க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளுடன் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ii. அலுவலக உதவியாளர் ஒருவராக கணினி அறிவு மற்றும் அனுபவம் மேலதிக தகைமைகளாக அமையும்.

iii. கம்பஹா மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பளம்:** 2019.03.05 ஆம் திகதிய நிதி அமைச்சின் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின்படி

## 6. ஓட்டுநர் - பதவி 03

**தகைமைகள்: (கீழுள்ள *I* அல்லது *II*)**

i. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளுடன் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழில் பயிற்சித் தகைமை**

ii. 24 cwt இற்கு குறையாத காலி எடையுடன் தனியார்/ வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்கள் மற்றும் station wagons தொடர்பில், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பு திகதிக்கு மூன்று (03) ஆண்டுகளுக்கு முன்னதாக, புதிய ஓட்டுநர் அனுமதிப்பத்திர திட்டத்தின்படி, குறைந்தபட்சம் C அல்லது C1 வகுப்பு அல்லது B வகுப்பின் செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும்).

**அனுபவம்:**

ஓட்டுநர் ஒருவராக மூன்று (03) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் (அனுபவத்தை நிரூபிப்பதற்காக ஆவண சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்)

**உடல் தகைமைகள்/ தகுதி**

i. குறைந்தது 05 அடி உயரமுடையவராக இருத்தல் வேண்டும் (05’- 0”)

ii. இரவு மற்றும் பகலில் பணியாற்றுவதற்கு சிறந்த உடல் தகுதியுடன் இருத்தல் வேண்டும் என்பதோடு சிறந்த கண் பார்வை இருத்தல் வேண்டும் மற்றும் அரச மருத்துவ அதிகாரி ஒருவரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபித்தல் வேண்டும்.

iii. கம்பஹா மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

iv. அபேட்சகர்களை தேர்வு செய்வதற்கு தொழில் திறன் சோதனை ஒன்று நடத்தப்படும்.

**சம்பளம் :** 2019.03.05 ஆம் திகதிய நிதி அமைச்சின் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின்படி

**வயது:**

பதவி இலக்கம் 1,2 மற்றும் 3 இற்காக விண்ணப்ப முடிவுத் திகதியில் 64 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

பதவி இலக்கம் 4,5 மற்றும் 6 இற்காக விண்ணப்ப முடிவுத் திகதியில் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

EPF (ஊழியர் சேமலாப நிதியம்) இற்கு ஊழியர் 8% பங்களிப்புச் செய்வதோடு தொழில் வழங்குநர் EPF (ஊழியர் சேமலாப நிதியம்) இற்கு 12% உம் ETF (ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்) இற்கு 3% உம் பங்களிப்புச் செய்வார்.

**ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்:**

திட்ட ஊழியர்கள் திருப்திகரமான செயல்திறன் மற்றும் திட்டத் தேவைகளை பொறுத்து வருடாந்தம் புதுப்பிக்கத்தக்கவாறு ஓர் ஆண்டு காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையிலேயே நியமிக்கப்படுவார்கள்.

**தொழில் இடமானது:**

**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தித் திட்டம் நிலை II கட்டம் 2**
**திட்ட முகாமைத்துவ பிரிவு.**
**மினுவன்கொட வீதி,**
**நயிகந்த,**
**கட்டுநாயக்க**

**விண்ணப்பங்கள்:**

இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரத்துடன் கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சேர்த்து சுயவிபரக்கோவையை கொண்ட விண்ணப்பங்களை 2025 நவம்பர் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு, கட்டம் 25, உலக வர்த்தக மைய மேற்கு கோபுரம், கொழும்பு 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்திற்கு இணைத்தல் வேண்டும்.

அரச/ அரச சார்பு துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணக்கள தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தகைமைகள் மற்றும் அனுபவம் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**செயலாளர்**
**துறைமுகங்கள் மற்றும் விமானசேவை அமைச்சு**
**கட்டம் 25, உலக வர்த்தக மைய மேற்கு கோபுரம்,**
**கொழும்பு 01**